முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.06.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுக மகா சூட்சும வடிவான
அண்ணலே ஞான தேசிகனே
மாறுதலை உலகினில் செய்ய
மகா ஞானியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுனதிங்கள்
வரங்களென முன்னான்கோர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 13 நாள், 27.06.2022 திங்கட்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே இசைஞானியார் யானும்
தரணியே நலம்பெற உரைப்பேன்
மண்ணுலகில் இயற்கையை மாற்றும்
மாபாவங்கள் பெருகி வர
4. வருகவே பேரிடர் அல்லல்
வதைக்கும் இயற்கை சீற்ற
தருமமிலா செயல் வடிவாலே
தர்க்கம் கலகம் யுத்தம் அழிவென
5. அழிவென அல்லல் கூடி வர
ஆபத்தை விரட்டும் நோக்கில்
அழியாமை பெற்று வந்த ஞானி
அரங்கன் வழி காட்டலே உலகை
6. உலகை மீட்கும் காக்கும்
உயிர் கொலை நீக்க தயவான
பழக்கவழக்கம்தனை மக்கள்
பழுதின்றி ஏற்று வந்திட
7. வந்திட அரங்கன் மார்க்கம்
வையகம் காத்து வருமுலகில்
எந்தஆபத்தும் வாரா தடுக்கும்
எல்லா வகையும் காப்புதரும்
8. தருகின்ற குணம் உயர்வை
தரணியோர் அடைய வேண்டியே
தருமம் வளர்த்து வரும் ஞானி
தருமத்தில் உதவி தொண்டு செய்ய
9. செய்யவே நல்வினை கூடும்
செய்வினை தீவினை ஓடும்
அய்யமிலா ஞானத் தெளிவு
ஆறுமுகனே ஞானக் கடவுள்

10. கடவுளே கலியினில் தந்த
கருணை மிகுந்த ஞானி
இடர்வெல்லும் அரங்கன் என
எல்லா சூட்சுமமும் விளங்கி

11. விளங்கி பெருமாற்றமும்
வினை கடந்து ஞானம் கூடி
களங்கமற பாதுகாப்பாய் வாழ்வர்
கடைத் தேற்றமும் அடைவர் அருளாசி முற்றே

–சுபம்–